**சுருக்கம்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – கிராம சபை கூட்டங்கள் நடத்துதல் – கிராம சபை கூட்ட செலவின வரம்பினை ரூ.1000/-லிருந்து ரூ.5000/- ஆக உயர்த்துதல் – ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.2) துறை**

**அரசாணை (நிலை) எண்.86** **நாள் 15.07.2022.**
**சுபகிருது, ஆனி 31,**
**திருவள்ளுவர் ஆண்டு 2053.**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.160, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.1) துறை, நாள் 30.09.2008.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண். 73232/2021/ப.ரா.2-3, நாள் 01.05.2022.
3. அரசாணை (நிலை) எண்.65, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.2) துறை, நாள் 24.05.2022.

*****

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கிராம சபையினை நடத்த, கிராம ஊராட்சியின் அனுமதியின்படி, கிராம ஊராட்சி நிதியிலிருந்து, அதிகபட்சமாக ரூ.1000/- செலவு செய்ய கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு அனுமதியளித்து வெளியிடப்பட்டது. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2022-ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் 6 முறை கிராம சபை கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்று ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், அரசாணை (நிலை) எண்.160, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(ப.ரா.1) துறை, நாள் 30.09.2008-ன்படி கிராம சபைக் கூட்டம் நடத்துவதற்கான செலவினங்களை ஊராட்சி மன்ற ஒப்புதலுடன் அதிகபட்சமாக ரூ.1000/- மட்டும் செலவினம் மேற்கொள்ள ஊராட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது 14 ஆண்டுகள் கடந்த நிலையில், இந்தத் தொகை போதுமானதாக இல்லை என்பதால், அதனை ரூ.5000/- ஆக உயர்த்தி கிராம சபை / சிறப்பு கிராம சபை நடைபெறும் நாட்களில் ஊராட்சி மன்ற ஒப்புதலுடன் ஊராட்சிப் பொது நிதியில் மேற்கொள்ள உரிய அரசாணை வழங்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

(த.பி.பா)

3. எனவே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. அதன் அடிப்படையில், கிராம சபை கூட்டங்கள் நடத்துவதற்கான செலவினம் ரூ.1000/- லிருந்து ரூ.5000/- ஆக உயர்த்தி அரசு ஆணையிடுகிறது. மேலும், கிராம சபை / சிறப்பு கிராம சபை நடைபெறும் நாட்களில் ஊராட்சி மன்ற ஒப்புதலுடன் ஊராட்சிப் பொது நிதியிலிருந்து மேலே ஒப்பளிக்கப்பட்ட இச்செலவினத்தை மேற்கொள்ள ஊராட்சி தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கி ஆணையிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**பெ.அமுதா**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**பெறுநர்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை-15.
கூடுதல் தலைமைச் செயலாளர் /
தலைமை இயக்குநர் (பயிற்சி), சென்னை 15.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
சென்னை-34.
தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்,
சென்னை-32.
செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சென்னை-105.
இயக்குநர், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்,
மறைமலைநகர், செங்கல்பட்டு.
திட்ட இயக்குநர் / உறுப்பினர் செயலர்,
தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம், சென்னை-32.
இணை இயக்குநர், தமிழ்நாடு சமூக தணிக்கைச் சங்கம், சென்னை-15.
மாநில கணக்காயர், சென்னை-18.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை – 9.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
அனைத்து திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள்.

**நகல்**

மாண்புமிகுஊரக வளர்ச்சி அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை -9.
நிதித் (ஊ.வ) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

ப. ஜெ. [signature] 15.7.2022
**பிரிவு அலுவலர்**